No. of Printed Pages : **12**

# 9071

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## PART - III

## அறவியலும் இந்தியப் பண்பாடும்

## ETHICS AND INDIAN CULTURE

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

### பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. மேன்மையான சிந்தனைகள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நம்மிடம் வரட்டும் என்று கூறும் வேதம் :

(அ) சாமம் (ஆ) ரிக் (இ) அதர்வணம் (ஈ) யஜூர்

'Let noble thoughts come to us from all parts' has been told by :

(a) Sama Veda (b) Rig Veda (c) Atharva Veda (d) Yajur Veda

2. ''பண்பாடு என்பது சீரிய வாழ்வு முறை. இவ்வாழ்வு முறை மக்கள் நம்பிக்கை வைத்துள்ள அடிப்படை மதிப்பீடுகளினால் ஊக்குவிக்கப்படுகிறது''.

(அ) வால்டேர் (ஆ) கே.எம். முன்ஷி

(இ) மாலினோசுக்கி (ஈ) ஆடம்சன் ஓபல்

"Culture is an excellent way of life. This way of life is being encouraged by the faith which people have on fundamental assessment" was said by :

(a) Waltair (b) K.M. Munshi

(c) Malinosuki (d) Adamsen Opal

3. இந்தியாவின் தேசிய நதியாக கங்கை அறிவிக்கப்பட்ட ஆண்டு :

(அ) 2007 (ஆ) 2005 (இ) 2008 (ஈ) 2006

Which year was Ganga declared as a National River ?

(a) 2007 (b) 2005 (c) 2008 (d) 2006

4. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (1) | தமிழ்நாடு | (i) | பருத்தி |
| (2) | குஜராத் | (ii) | நெல் |
| (3) | கர்நாடகா | (iii) | தேயிலை |
| (4) | அஸ்ஸாம் | (iv) | காபி |

(அ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)

(ஆ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

(இ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

(ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

Match the following :

| | | | |
|---|---|---|---|
| (1) | Tamil Nadu | (i) | Cotton |
| (2) | Gujarat | (ii) | Paddy |
| (3) | Karnataka | (iii) | Tea |
| (4) | Assam | (iv) | Coffee |

(a) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)

(b) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

(c) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

(d) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

5. உபநிடதங்களில் சிலவற்றைப் பாரசீக மொழியில் மொழிபெயர்த்த முகலாய இளவரசர் :

(அ) மூரத் (ஆ) ஷாஷீஜா (இ) தவார்பக்ஷ் (ஈ) தாராஷீகோ

The Mughal Prince who translated some of the Upanishads into Parsi language was :

(a) Moorat (b) Shah She Ja (c) Thavar Baksh (d) Tharashigo

6. இந்திய தேசிய மரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதைத் தேர்ந்தெடுக்கவும் :

(அ) தென்னை மரம் (ஆ) பனைமரம் (இ) அரச மரம் (ஈ) ஆலமரம்

Choose the Indian National Tree ?

(a) Coconut Tree (b) Palm Tree (c) Peepul Tree (d) Banyan Tree

7. **சரியாகப்** பொருத்தப்பட்டுள்ள விடைக் குறிப்புகளைக் கண்டறிக.

| | **சமயம்** | | **புனித நூல்** |
|---|---|---|---|
| (1) | பௌத்தம் | - | ஆதி கிரந்தம் |
| (2) | இஸ்லாம் | - | திருக்குரான் |
| (3) | சமணம் | - | திரிபீடகம் |
| (4) | ஜொராஸ்டிரம் | - | ஜென்ட் அவஸ்தா |

(அ) (1), (4) சரியானவை (ஆ) (1), (2) சரியானவை

(இ) (2), (4) சரியானவை (ஈ) (2), (3) சரியானவை

Find the **correctly** matched pair.

| | **Religion** | | **Sacred text** |
|---|---|---|---|
| (1) | Buddhism | - | Aadhi Grantha |
| (2) | Islam | - | Thiru Quran |
| (3) | Jainism | - | Thripitaka |
| (4) | Zorastrianism | - | Zent Avastha |

(a) (1), (4) are correct (b) (1), (2) are correct

(c) (2), (4) are correct (d) (2), (3) are correct

8. ஜீனர் என்ற சொல்லின் பொருள் :

(அ) பிறவிப் பெருங்கடலை நீந்துபவர்

(ஆ) புலன்களை அடக்கியாள்பவர்

(இ) வெண்ணிற ஆடை அணிபவர்

(ஈ) திசைகளை ஆடைகளாக அணிபவர்

The meaning of the word 'Jeena' is :

(a) One who swims through the sea of life

(b) One who has control over his senses

(c) One who wears white dress

(d) One who wears the directions as his dress

9. கோல்கொண்டா கோட்டையைக் கட்டியவர் :

(அ) இரண்டாம் கிருஷ்ண தேவராயர்

(ஆ) கிருஷ்ண தேவராயர்

(இ) இரண்டாம் கிருஷ்ணதேவ்

(ஈ) இராஜா கிருஷ்ணதேவ்

Golconda fort was built by :

(a) Krishna Deva Raya II

(b) Krishna Deva Raya

(c) Krishnadev II

(d) Raja Krishnadev

10. வானவியலிலும் கணிதத்திலும் சிறந்து விளங்கியவர்களைத் தேர்ந்தெடுக்க :

(1) ஆரியபட்டர் (2) வராகமிகிரர்

(3) பிரம்மகுப்தர் (4) பாஸ்கரர்

(அ) (1), (3), (4) சரியானவை (ஆ) (1), (2), (3) சரியானவை

(இ) (1), (2), (4) சரியானவை (ஈ) (2), (3), (4) சரியானவை

Choose the people who excelled in Astronomy and Mathematics :

(1) Aryabhatta (2) Varahamihira

(3) Brahma Gupta (4) Bhaskara

(a) (1), (3), (4) are correct (b) (1), (2), (3) are correct

(c) (1), (2), (4) are correct (d) (2), (3), (4) are correct

**11.** அக்பரின் அவையில் இடம் பெற்றிருந்த பக்தி இயக்க ஞானி :

(அ) குருநானக் (ஆ) கபீர் (இ) மீராபாய் (ஈ) சூர்தாசர்

Who was the Bhakti Movement Saint in the court of Akbar ?

(a) Guru Nanak (b) Kabir (c) Meerabai (d) Surdas

**12.** பின்வரும் **கூற்றையும் காரணத்தையும்** படித்துச் **சரியான** விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

**கூற்று** : முதலாம் மகேந்திரவர்மன் 'சங்கீரணசாதி' என்ற விருதுப் பெயர் பெற்றிருந்தார்.

**காரணம்** : அவர், பரிவாதினி என்ற வீணையை மீட்டுவதில் வல்லவர்.

(அ) **கூற்று, காரணம்** இரண்டும் தவறு.

(ஆ) **கூற்று** மட்டும் சரி.

(இ) **கூற்று, காரணம்** இரண்டும் சரி.

(ஈ) **காரணம்** மட்டும் சரி.

Read the following **Statement and Reason** and select the right answer.

**Statement :** Mahendravarman I received the title of 'Sangeerana Saathi'.

**Reason :** He was proficient in playing the veena named 'Parivadhini'.

(a) Both **Statement** and **Reason** are wrong.

(b) Only **Statement** is correct.

(c) Both **Statement** and **Reason** are correct.

(d) Only **Reason** is correct.

**13.** 19 -ம் நூற்றாண்டின் சமூக சமய சீர்திருத்தவாதிகளில் முதன்மையானவர் :

(அ) பிளாவாட்ஸ்கி அம்மையார் (ஆ) சுவாமி விவேகானந்தர்

(இ) தயானந்த சரஸ்வதி (ஈ) இராஜாராம் மோகன்ராய்

The leading socio-religious reformer of the $19^{th}$ Century :

(a) Madam Blavatsky (b) Swami Vivekananda

(c) Dayanand Saraswati (d) Rajaram Mohan Roy

**14.** விடுபட்ட இடத்தில் **சரியான** விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

| | **இயற்பெயர்** | | **அறியப்பட்ட பெயர்** |
|---|---|---|---|
| (i) | மூல்சங்கர் | - | தயானந்த சரஸ்வதி |
| (ii) | நரேந்திரநாத் தத்தா | - | விவேகானந்தர் |
| (iii) | கடாதர சட்டர்ஜி | - | இராமகிருஷ்ண பரமஹம்சர் |
| (iv) | காத்தவராயன் | - | ____________________ |

(அ) அயோத்திதாசப் பண்டிதர் (ஆ) திருவருட்பிரகாச வள்ளலார்

(இ) நாராயண குரு (ஈ) தந்தை பெரியார்

Choose the **correct** answer in the blank.

| | **Original name** | | **Known as** |
|---|---|---|---|
| (i) | Moolshankar | - | Dayanand Saraswati |
| (ii) | Narendranath Datta | - | Vivekananda |
| (iii) | Gadadhar Chatterjee | - | Ramakrishna Paramahamsa |
| (iv) | Kaathavarayan | - | ____________________ |

(a) Iyodhithasa Pandithar (b) Thiruvarutprakasa Vallalar

(c) Narayana Guru (d) Thanthai Periyar

**15.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) | அஹிம்சை | (i) | பொருள் சேர்க்காமை |
| (2) | சத்தியம் | (ii) | திருடாமை |
| (3) | அஸ்தேயம் | (iii) | உண்மை |
| (4) | அபரிக்கிரஹம் | (iv) | வன்முறை இல்லாமை |

(அ) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

(ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(இ) (1)-(i), (2)-(iv), (3)-(iii), (4)-(ii)

(ஈ) (1)-(iii), (2)-(ii), (3)-(i), (4)-(iv)

Match :

| | | | |
|---|---|---|---|
| (1) | Ahimsa | (i) | No hoarding of wealth |
| (2) | Sathiyam | (ii) | No stealing |
| (3) | Astheyam | (iii) | Truth |
| (4) | Aparikkragam | (iv) | No violence |

(a) (1)-(ii), (2)-(i), (3)-(iv), (4)-(iii)

(b) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(c) (1)-(i), (2)-(iv), (3)-(iii), (4)-(ii)

(d) (1)-(iii), (2)-(ii), (3)-(i), (4)-(iv)

**16.** **தவறான** இணையைச் சுட்டிக்காட்டிடுக.

(அ) தபஸ் - ஆடம்பரம்

(ஆ) லௌச்சனம் - தூய்மை

(இ) ஸ்வத்யாமம் - தன்னைப் பற்றிய எளிமை

(ஈ) சந்தோசம் - திருப்தி

Find out the **wrong** pair.

(a) Tapas - Luxury

(b) Lauchanam - Purity/cleanliness

(c) Swatyamam - Humility

(d) Santhosham - Satisfaction

**17.** ஆய்காஸ் என்பது எந்த மொழிச் சொல் ?

(அ) கிரேக்கம் (ஆ) இலத்தீன் (இ) ஸ்பானிஷ் (ஈ) பிரெஞ்சு

'Aigas' is a __________ word.

(a) Greek (b) Latin (c) Spanish (d) French

**18.** __________ சிப்கோ இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

(அ) அனில் அகர்வால் (ஆ) சுனிதா நரேன்

(இ) அம்ரிதா தேவி (ஈ) பகுகுணா

Who started the Chipko Movement ?

(a) Anil Agarwal (b) Sunita Naren

(c) Amrita Devi (d) Bahuguna

19. பின்வரும் **கூற்றுகளைப்** படித்துச் **சரியான** விடையைத் தேர்ந்தெடுக்க.

**கூற்று (I) :** தமிழ்நாட்டுக்குரிய சிறந்த நடனங்களுள் ஒன்று பரதம்.

**கூற்று (II) :** பரத முனிவரால் உருவாக்கப்பட்டதால், இந்நடனம் பரதம் எனப் பெயர் பெற்றது.

(அ) **கூற்று (I) கூற்று (II)** சரியானவை.

(ஆ) **கூற்று (I) கூற்று (II)** தவறானவை.

(இ) **கூற்று (I)** தவறு, **கூற்று (II)** சரி.

(ஈ) **கூற்று (I)** சரி, **கூற்று (II)** தவறு.

Read the following sentences and choose the right answer.

**Statement I :** Bharatham is one of the excellent dance forms of Tamil Nadu.

**Statement II :** This dance form came to be called Bharatham, because it was established by Sage Bharatha.

(a) **Statements I** and **II** are right.

(b) **Statements I** and **II** are wrong.

(c) **Statement I** is wrong but **Statement II** is right.

(d) **Statement I** is right but **Statement II** is wrong.

20. கேரள மாநிலத்தின் பாரம்பரிய நடனம் :

(அ) குச்சிப்புடி (ஆ) கதகளி

(இ) பிதஸியம் (ஈ) யக்ஷகானம்

The traditional dance of Kerala State is :

(a) Kuchipudi (b) Kathakali

(c) Pithisium (d) Yakshaganam

## பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any 7** questions. Question No. **30** is **compulsory**.

**21.** இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் சான்றுகளைக் குறிப்பிடுக.
Point out the evidences which throw light on Indian Culture.

**22.** இந்தியாவைத் தீபகற்ப நாடு என அழைக்கக் காரணம் என்ன ?
Why is India called a Peninsular country ?

**23.** முன்வேதகால மக்களின் பொழுதுபோக்குகள் யாவை ?
What were the various entertainment of the people of Pre-Vedic Period ?

**24.** திரிரத்தினங்கள் என்பவை யாவை ?
What are the Tri-Ratnas ?

**25.** தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் குறிப்பு வரைக.
Write a note on Tanjore Brahadeeswarar Temple.

**26.** காந்தாரக்கலை என்றால் என்ன ?
What is meant by Gandhara art ?

**27.** பரபக்தி குறித்து குறிப்பு வரைக.
Write a note on Parabakthi.

**28.** பிரம்ம சமாஜத்தின் தோற்றம் குறித்து எழுதுக.
Write about the origin of Brahmo Samaj.

**29.** பிராணாயாமம் என்றால் என்ன ?
What is Pranayamam ?

**30.** 'அறம்' என்ற சொல்லுக்குத் தமிழ் இலக்கிய அகராதி கூறும் பொருள்களைக் குறிப்பிடுக.
Give the meanings of the word 'Aram' according to the Tamil Literature Dictionary.

## பகுதி - III / PART - III

**குறிப்பு :** **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** இந்தியப் பண்பாட்டின் சிறப்பு கூறுகள் யாவை ?
What are the special features of Indian culture ?

**32.** ''இந்தியாவைப் பல இனங்களின் அருங்காட்சியகம்'' எனக் கூறக் காரணம் என்ன ?
Why is India called a 'Museum of Ethnic groups' ?

**33.** ஐவகைப் பண்புகள் எனப் புராணம் எவற்றைக் கூறுகிறது ?
What five qualities does Purana specify ?

**34.** இல்லறத்தார் பின்பற்ற வேண்டிய ஐந்து ஒழுக்கங்களாக பௌத்த சமயம் கூறுவது யாது ?
What according to Buddhism are the five virtues to be followed by Gruhasthas ?

**35.** குடவோலை முறை என்றால் என்ன ?
What is Kudavolai system ?

**36.** மன்சப்தாரி முறை பற்றி சிறு குறிப்பு வரைக.
Write a short note on Mansabdari system.

**37.** ''ஐந்து வண்ணத்தார்'' குறிப்பு வரைக.
Write a note on "Five Vannathars".

**38.** ஞானேஷ்வர் குறிப்பு வரைக.
Write a note on Gnaneshwar.

**39.** இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் எழுதுக.
Write about the ideals and objectives of the Ramakrishna Movement.

**40.** இந்தியப் பண்பாட்டில் மலைகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் யாது ?
What is the importance given to mountains in Indian culture ?

## பகுதி – IV / PART - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) பண்பாட்டுக் கல்வியின் பயன்கள் யாவை ?

**அல்லது**

(ஆ) இந்தியப் பண்பாட்டிற்கு மௌரியர்களின் பங்களிப்பினை தொகுத்து எழுதுக.

(a) What are the benefits of cultural education ?

**OR**

(b) Summarise the contribution of Mauryas to Indian culture.

**42.** (அ) 'வேற்றுமையில் ஒற்றுமை' என்னும் உயரிய கோட்பாடே இந்தியப் பண்பாட்டின் தனிச்சிறப்பு என்பதனை விவரிக்க.

**அல்லது**

(ஆ) குப்தர்கள் காலம் இந்திய வரலாற்றில் ''செவ்வியல் காலம்'' என்று அழைக்கப்படுவது ஏன் ?

(a) Elaborate on the special features of the noble theory of Indian culture, 'Unity in Diversity'.

**OR**

(b) Why is the Gupta period called as the Golden age in Indian History ?

**43.** (அ) உபநிடதங்கள் பற்றி நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) ஷாஜஹான் காலம் முகலாயக் கட்டடக்கலையின் பொற்காலம் என்பதனை நிரூபிக்க.

(a) Summarise your views on the Upanishads.

**OR**

(b) Prove that Shahjahan's reign was the Golden Age of Mughal architecture.

**44.** (அ) இந்தியப் பண்பாட்டு உயர்வுக்கு அடிப்படையாகத் திகழ்வன சமயங்களாகும் என்பதனை விவரிக்க.

**அல்லது**

(ஆ) பல்லவர்கால கலை, கட்டடக்கலை பற்றி எழுதுக.

(a) Describe that 'religion was the illustrious foundation for India's cultural excellence.'

**OR**

(b) Write about the art and architecture of the Pallava period.

**45.** (அ) நாதயோகாவின் பயன்கள் குறித்து நீவிர் அறிந்தவற்றை விவரிக்க.

**அல்லது**

(ஆ) சமூக சமய சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள் குறித்துத் தொகுத்து எழுதுக.

(a) Explain the uses of Nathayoga.

**OR**

(b) Summarise the consequences of Socio-religious Reformation Movement.

**46.** (அ) எவையேனும் ஐந்து ஆசனங்களைச் செய்யும் முறைகளை எழுதுக.

**அல்லது**

(ஆ) ஆரிய சமாஜத்தின் கோட்பாடுகள் யாவை ?

(a) Write about the process of performing for any five asanas.

**OR**

(b) Write the principles of Arya Samaj.

**47.** (அ) சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய பங்கினை விவரிக்க.

**அல்லது**

(ஆ) உலகிற்கு இந்தியப் பண்பாட்டின் கொடைகளுள் ''அறக்கோட்பாடுகள்'' பெறுமிடத்தை விளக்குக.

(a) Explain in detail the role of students in preserving the environment.

**OR**

(b) Explain the position of ethical principles in the contribution of Indian culture to the world.

**- o 0 o -**